பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 01 ஞாயிற்றுக்கிழமை ( 14 - 05 - 2000 ) VALAMPURI ஒலி: 147

★ சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக

# அரசு - விடுதலைப் புலிகள் நடந்துகொள்ளவேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள்

(லண்டன்)

இலங்கையின் வட பகுதி யாழ்ப்பாணத்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் யுத்தத்தினால் ஐந்து லட்சம் அப்பாவித் தமிழ்மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் சேதம் ஏற்படாதவாறு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருசாராரும் நடந்து கொள்ள வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

யாழ். குடாநாட்டில்வாழுகின்ற ஐந்துலட்சம் தமிழ் மக்களின் உயிர் உடமைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் யுத்தத்திலீடுபட்டுள்ள இரு தரப்பினரும், அனைத்துலக மனிதாபிமான சட்டத்திற்கு அமைவாக நடந்துகொள்ள வேண்டும்.

தற்போது யுத்தத்தில் ஈடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மகாவித்தியாலயம் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ,ஷெல் தாக்குதலின் போது பலர் காயமடைந்ததாக ஊர்ஜிதப் படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

பாடசாலையில் இடம் பெயர்ந்த பலர் தங்கியிருந்த போதே இத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [சு]

★ விடுதலைப்புலிகள் இயக்கம்மீதான

## தடை நீடிப்பிற்கு இலங்கை வரவேற்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையுத்தரவை இந்தியா நீடித்த செயல் வரவேற்கத்தக்கது என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் மேலும் தெரிவிக்கையில்: உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சரியான நடவடிக்கை என இலங்கை

(2ஆம் பக்கம் பார்க்க)

★ சங்கானைப் பகுதியில்

## யுத்த நிலையைச் சாதகமாக்கி விலை கூட்டி விற்கும் வர்த்தகர்கள்

### பாவனையாளர் மத்தியில் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

தற்போதைய யுத்த நிலையைவர்த்தகர்கள்தமக்கு சாதகமாக்கி பொருட்களின் விலையைக்கூட்டி விற்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் பாவனையாளர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சங்கானைப் பகுதி வர்த்தக நிலையங்களிலேயே பொருட்கள் கூடிய விலையில் விற்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்குப்பகுதியிலேயே தஞ்சம்

(2ஆம் பக்கம் பார்க்க)

## படகுகளின் வெளியிணைப்பு யந்திரங்களைபொலிசில் ஒப்படைக்க உத்தரவு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கடற்பிரதேசத்தில் மீன்பிடிக்கும் கடற்றொழிலாளர்களின் படகுகளின் வெளியிணைப்பு இயந்திரங்களை மீனவர்கள் இருக்கும் இடங்களுக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்க வேண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந். கடற்படையின் கூட்டு ஒத்திகை புலிகளுக்கு எச்சரிக்கையா?

(சென்னை)

இந்தியக்கடற்படையும் கடலோரப் பாதுகாப்பும் படையும் இணைந்து விசாகபட்டினம் கடற்பகுதியில் நடாத்திய ஒத்திகையானது விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் தன்மையாகவே கருதப்பட முடிகிறது என கொழும்பில் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இவ் ஒத்திகையின்போது ஐந்து பாரிய

(4ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் முடிவிற்கு கல்கத் வரவேற்பு!

(புதுடில்லி)

தற்போதுள்ள சூழ்நிலையில் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா எடுத்துள்ள முடிவை முன்னாள் அமைதிப்படைத் தளபதி ஜெனரல் கல்கத் வரவேற்றுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியஇராணுவ தலையீடு அல்லது ஆயுத உதவியோ செய்யக் கூடாது அவ்வாறு உதவி செய்தால் நோய்க்கு மருந்து எடுப்பதாக இல்லாது மேலும் நோயை வளர்ப்பதாக அமையும் என்று தெரிவித்துள்ளார். (வ)

## இந்திய வெளியுறவு அமைச்சரை விமானப்படைத் தளபதி சந்தித்தார்!

(புதுடில்லி)

இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பாக இந்திய விமானப்படைத் தளபதி எயார் வைஷ் மார்சல் டிக்னிஸ் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்தர்சிங்கை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### அன்புவாசகர்களே

யாழ். குடா நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக இன்று வலம்புரி நான்கு பக்கங்களிலேயே வெளிவருகிறது.

நிலைமைஉணர்ந்தநீங்கள் இதனை பொறுமையுடன் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஆ(-ர்)

யுத்த நிலைமையை அடுத்து

## இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நெருக்கடி நிலையினால் கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் யாழ். நகரில் உள்ள பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(2ஆம் பக்கம் பார்க்க)

ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்ன்

## மாளிகை மீது ஏவுகணைத் தாக்கு சிறுமி பலி! நான்கு பேர் காயம்!

### தீவிரவாத அமைப்பு உரிமைகோரியது

(பாக்தாத்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்னின் குடியரசு மாளிகை மீது மேற்கொள்ளப்பட்ட 'ஸ்கட்' ஏவுகணைத் தாக்குலினால் 3 வயதுச் சிறுமி உயிரிழந்ததுடன் 4 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன் வந்த கப்பல்

## மண்ணெண்ணை இறக்காது மீண்டும் கொழும்பிற்குத் திரும்பும்?

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள மண்ணெண்ணைகாங்கேசன் துறைதுறைமுகத்தில் இறக்கப்படாமல் திரும்பிச்செல்லவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கப்பலில் இருந்து தருவிக்கப்படும் எரிபொருள்களைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரி யாழ்ப்பாணத்தில் தங்கி இருப்பதனால் [ஊரடங்குச்சட்டம் அமுலில்

(4ஆம் பக்கம் பார்க்க]

# பாகிஸ்தானில் மூன்று ஆண்டிற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்!

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் எதிர்வரும் மூன்று ஆண்டுகளிற்குள் பொதுத்தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென அந்நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த அக்டோபரில் இராணுவப் புரட்சி மூலம் ஜெனரல் பெர்வேஸ் முஸாரப் ஆட்சியைக் கைப்பற்றியமை சரியான செயல் என மேற்படி நீதிமன்றம் மேலும் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் தற்போது புதிய ஒரு விசாரணைக்கு முகம் கொடுக்கவேண்டி உள்ளதாகவும்தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே விமானக்கடத்தல் மற்றும் பயங்கரவாதக் குற்றங்கள் தொடர்பாகவிசாரிக்கப்பட்டு தற்போது சிறையில் உள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் தற்போது ஹெலிகொப்டர்கொள்வனவு தொடர்பாக வருமானவரிப் பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்பது தொடர்பாக விசாரிக்கப்பட்டு வருகிறாராம்.

மேற்படி குற்றச்சாட்டுக்களை மறுத்துரைத்த நவாஸ் ஷெரிப் இது தம் மீது வேண்டுமென்றே சுமத்தப்பட்ட அபாண்டமான பழி என்று தெரிவித்துள்ளார். (க)

# ஊரடங்கு மீண்டும் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை மற்றும் சாவகச்சேரிநகரப் பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 8. 30 மணியிலிருந்து 12. 30. மணிவரை தளர்த்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு மீண்டும் அமுல் படுத்தப்பட்டதாக யாழ். நடவடிக்கை தலைமைச் செயலகம் நேற்று தெரிவித்தது. (க-வ)

# கொழும்புத்துறைப் பகுதி மோதலில் மூன்று படையினர் பலி! 38 பேர் காயம்

## புலிகள்தரப்பிலும் பலர் பலி அரசுஅறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் நடைபெற்ற மோதலில் மூன்று படையினர்உயிரிழந்ததாகவும்38பேர் காயமடைந்தனர் எனவும் இராணுவ நடவடிக்கைகள் தலைமைச் செயலகம் நேற்றுத் தெரிவித்தது.

தலைமையகம் மேலும் தெரிவிக்கையில்;

நாகர்கோவில், முகமாலை வெலிஓயா. போன்ற பகுதிகளில் நடைபெற்ற மோதல்களின் போது மூன்று படையினர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தரப்பிலும் பலர் பலியானதாகவும் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

நவீன இராணுவ உபகரணங்களை புதிய யுக்தியின் அடிப்படையில் பயன்படுத்தி படையினர் தற்போது தமது தாக்குதல் நடவடிக்கைகளை மாற்றியமைத்துள்ளதாகவும் மேலும் தலைமையகம் தெரிவித்துள்ளது. (க)

# மரம் தறித்ததில் இடையில் அகப்பட்ட பெண் உயிரிழப்பு! மற்றவர் காயம்!

## பொலி கண்டியில் சம்பவம்

(புலோலி)

விறகிற்காக ஓதியமரம் தறித்தபோது மரம் விழுந்ததில் இடையில் அகப்பட்ட பெண் ஒருவர் மரணமானார் மற்றையவர் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிகண்டியில் நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் மேரி சொர்ணம்மா (வயது35) என்பவரே மரணமானவராவார். எஸ். ஆரியமலர் [வயது 35] என்பவரே காயங்களுடன் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ. கே. நடராசா மரண விசாரணையை நடத்தினார். பிரேத பரிசோதனையை மாவட்ட வைத்திய அதிகாரி கே. மயிலேறும் பெருமாள்மேற்கொண்டார்.

விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது. அதிக இரத்தப் பெருக்கே மரணத்திற்கு காரணம் எனவும் வைத்திய அதிகாரி தெரிவித்தார். (க-52)

# ஆறுபேரைக் காணவில்லை ஆணைக் குழுவில் புகார்

[வவுனியா]

வவுனியாவில் ஆறு பேர் காணாமல் போயுள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார் செய்யப்பட்டுள்ளன.

இவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பணிக்கர் புளியங்குளம் பகுதியில் பாலைப்பழம்பிடுங்கச்சென்ற போது சின்னையா நவரத்தினம் (வயது 50) நவரத்தினம் இராசம்மா (வயது 45) நவரட்ணம் சிவகுமார்[வயது25] ஆகியோர் காணாமல் போயுள்ளனர்.

செட்டிக்குளம் பிரதேச செயலர் பகுதிக்குட்பட்ட முதலியார் குளிச்சியைச் சேர்ந்த தர்மேந்திரன், நாகராசா(வயது34) பொன்னுத்துரை சந்திரசேகரன்(வயது 37)செல்லத்துரை ஜெகநாதன்[வயது 34] ஆகியோரே காணாமல் போனவர்கள். [வ]

### யுத்த...

புகுந்து வருகிறார்கள் வீடம் பெயரும் மக்கள் அங்குள்ள பாடசாலைகளிலும், உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதனை அடுத்தே அங்கு பாவனைப் பொருட்களின் விலை அதிகரித்திருப்பதாகவும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 42/- ரூபா முதல் 45/- ரூபாவாகவும், சீனி ஒரு கிலோ 38/- ரூபா முதல் 40/- ரூபாவாகவும், கோதுமைமா கிலோ 24/- ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாகவும், ''விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல்'' வர்த்தகர்கள் நடந்துகொள்வதாகவும் இடம்பெயர்ந்து அங்கு தங்கி உள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-வ)

### மாளிகை ..

இத்தாக்குதலை அடுத்து அதிபர் மாளிகைக்கு பூரண பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டதுடன் ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களும் அமைக்கப்பட்டதாக ஈராக் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஈரானில் இயங்கும் தீவிரவாத அமைப்பு ஒன்று இத்தாக்குதலிற்கு உரிமைகோரியுள்ளதாக ஈராக் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒன்பது ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் தாக்குதலையடுத்து அப்பகுதி முழுவதும் ஒரே புகைமண்டலமாகக் காணப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.


## தற்காலிக இடமாற்றம்

இல 64, ஆஸ்பத்திரி வீதியில்
இதுவரை . காலமும் இயங்கி வந்த

## நடராஜா ஸ்ரோர்ஸ்

தற்காலிகமாக இல 205, சிவன்பண்ணை வீதியிலுள்ள [வைத்தீஸ்வராக் கல்லூரிச் சந்தி] அமைவிடத்தில் இயங்கும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

- ★ பால்மா வகைகள்
- ★ மலிபன் பிஸ்கட் வகைகள் மற்றும்
- ★ ரொபி வகைகள் யாவும்

மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

[கி-308] உரிமையாளர்


யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியின்

# தாய்-சேய் நலன்காக்க நிதியத்திற்கு உதவி கோரப்படுகிறது

தற்சமயம் எமது மக்களிடையே குறிப்பாகக் குழந்தைகள்,பாலர், தாய்மாரிடையே பேசாக்கின்மையால் வரும் பாதிப்புக்கள் கூடி வருவதைக் காண்கின்றோம். எமதுநிலையத்தால் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் மேற்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு நிலையங்கள் நடாத்தி வந்தோம். இந்த வருடம் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் இதுவரை கிடைக்கவில்லை எதிர்வரும் காலத்தில் கிடைத்தாலும் அவை மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருக்கும். இந்நிலையில் போஷாக்குக் குறைந்து ஆபத்து நிலையில் உள்ள தாய்மார், பிள்ளைகளுக்கு உதவும் முகமாக எம்மால் ஒரு நிதியம் குறொசெற் தம்பையா குடும்பத்தினர் உதவியுடன் சில வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு ஒரு தொகைப்பணம் சேர்ந்துள்ளது. அந்நிதியம் ''Save The Boain Fund'' என்ற பேரில் வர்த்தக வங்கி (யாழ் கிளையில்) C/A12698 நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால்இருக்கும் தொகை ரூபா 26,000/-மட்டுமேஇத்தொகை போஷாக்கு புனர்வாழ்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போதுமானதாக இல்லைஇத் திட்டத்தைநடைமுறைப்படுத்தப் போதியநிதிவசதி தேவைபொதுமக்கள் பொது அமைப்புகள் வர்த்தகப் பெருமக்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் இத் திட்டத்திற்கு உதவ விரும்பினால் இந்நிதியத்தின் கணக்கிற்கு தமது பங்களிப்பை எமக்கு அறியத்தந்துவிட்டு அனுப்பி வைக்கலாம். நிதியத்திற்கு அனுப்பும் பொழுது Save The Brain Fund Municipal Council Jaffna என்று காசோலைகள் எழுதப்படவேண்டும். எமக்குக் கிடைக்கும் நிதியுதவிக்குத் தனித்தனியாகப் பற்றுச்சீட்டுக்கள் அனுப்பிவைக்கப்படுவதுடன் நிதி எவ்வாறு யாருக்குப் பயன் படுத்தப்பட்டது என்பது பற்றி வருடாந்த அறிக்கையும் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

என யாழ், மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக்கலாநிதி ஆர். தெய்வேந்திரன் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார். [ந]

# யாழ்ப்பாண யுத்தநிலை தொடர்பாக பாடசாலைகளில் தங்கியுள்ளோருக்கு முதலுதவிச்சிகிச்சையை உடன் வழங்குக

## ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்ப்பாணத்தில்தொடரும்யுத்த நிலைமை காரணமாக இடம்பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் தேவாலயங்களில் தங்கியுள்ளோருக்கு உடனடியாக தேவையான முதலுதவிச் சிகிச்சையினை வழங்குமாறு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன் கேட்டுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும்தெரிவிக்கையில் மேற்படி அமைப்பின் அங்கத்தவராக செயற்படும் மாணவர்கள் இரு விடயத்தில் முனைப்புடன் செயற்படுமாறும் மருந்துகள் தேவையானோர் தம்மிடம் உடனடியாகதொடர்பு கொள்ளுமாறும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். [க]

### மக்கள் நடமாட்டம்

யாழ். நகரப் பகுதியில் நேற்று ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த போதும் நகரில் மக்கள் நடமாட்டம் கணிசமான அளவில் காணப்பட்டது.

ஆங்காங்கு வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகள் இடம் பெற்றதையும் அவதானிக்க முடிந்தது.

எனினும் யாழ் மரக்கறிச் சந்தை மீன்சந்தை என்பன வெறிச்சோடியநிலையிலேயே காணப்பட்டன. (க-வ)

### இடம்பெயர்ந்த...

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ், சென்சான்ஸ்,டொண்பொஸ்கோ, கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி, பெரியகோயில், திரேசம்மா ஆலயம் ஆகிய இடங்களில் மக்கள் பெருமளவில் தங்கியுள்ளனர். (வ)

### தடை....

அரசு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் இந்தியாவின் மேற்படி செயலைப்பாராட்டியுள்ளதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொல்லப்பட்டதை அடுத்து விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையுத்தரவை இந்திய மத்திய அரசாங்கம் விதித்திருந்தது ஏற்கனவே தெரிந்ததே. (க)


## உருளைக்கிழங்கு விற்பனைக்கு

உருளைக்கிழங்கு மொத்தமாகவும்
சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு:

## சி. முருகானந்தன்

34. பீ, ஏ தம்பிலேன்,
வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம்.

துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று - குறள்

# வலம்புரி

## உயிர்களும் உடமைகளும்

யாழ். குடாவில் இன்னல்பட்டு விநாடிக் கணக்கில் உயிருக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் மக்கள் நிலை என்ன? அவர்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் உத்தரவாதம் வேண்டுமென்று யோசப் பரராசசிங்கம் மாவை. சேனாதிராசா உள்ளிட்ட கூட்டணி எம். பிக்கள் குரல் கொடுத்திருக்கிறார்கள். பொறுப்பான மனிதாபிமான வேண்டுகோள் தான்.

சர்வதேச சமூகம் வடபுலத் தமிழர்கள்பால் தமது அனுதாபப் பார்வையைச் செலுத்த வேண்டும். ஆதரவுக் கரங்களை நீட்ட வேண்டும். நாமும் மனிதர்களே - நாளும்நலிவடைந்து ஏக்கப் பெருமூச்சு விடப் பிறந்தவர்களில்லையே.

அரசியல் அணுகுமுறை வேறு. இன்னுயிர்கள் அதற்குப் பகடைக்காயாகக் கூடாது. அரசு ஏனோ தானோ என்ற போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது. தாயும் சேயும் போல் அரசும் மக்களும் நிலவும்நாடுகளில்சனநாயகம் தழைக்கிறது. சாத்வ கம் பெருமை கொள்கிறது.வாழ்வியல் வனப்புறுகிறது. அந்த உதாரணங்கள் தக்கதோர் பாடமாக எங்கள் நாட்டுஅதிகார பீடத்தினருக்கு அமைய வேண்டும்,

நித்தமும்யுத்தபூமியாக நீடிக்க விடாது நீதியும் நியாயமும் உணர்ந்து ஒரு சுமுக முடிவுக்குவந்தே ஆக வேண்டும். உரிமைப் போர் உலகில் எந்த நாட்டிலும்தோற்றது இல்லை. பாலஸ்தீனம் அதற்கு ஓர் உதாரணம். இந்தோனேசியாவில் இருபத்தைந்து வருடக் கிளர்ச்சி முடிவுக்கு வந்திருக்கிறது. நடக்க முடியாதது ஒன்றுமில்லை. அன்றியும் கல்வி கேள்விகளில் சிறந்தநாட்டுப் பிரஜைகள் நாம் என்பதைப் பெருமையோடு சிந்திக்க வேண்டும்.

அடைய முடியாப் பொருளுக்கு சர்ச்சையில்லை- உரிமைப்பொருளுக்கே உலவிடும்போர் என நினைப்பார்களாயின் நாட்டில் அவலமில்லை: ஆற்றாத கண்ணீர் இல்லை. வெளுத்ததெல்லாம் பால் என்ற வேதனையில்லை. உழுத்துப்போன பழமைவாத அரசியல் அஸ்தமிக்கட்டும். சமாதானக் கதிரவன் ஆரோக்கியமாக எழட்டும்.

- அன்புடன் ஆசிரியர்

## அரிசி சீமெந்து கப்பலில்இருந்து இறக்கப்பட்டன

(புலோலி)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'குமண' மற்றும் பொல்கொட் ஆகிய கப்பலில்இருந்துஅரிசிசீமெந்து ஆகிய பொருட்கள் நேற்று இறக்கப்பட்டன.

கடந்த மூன்று நாட்களாக மேற்படி கப்பல்களில்இருந்து பொருட்கள் இறக்கப்படாமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-52)

★ இந்திய கடல் எல்லைக்குள் வரும்

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவிகள் வழங்க அரசு தயார்

## இந்திய கடற்படை துணை அதிகாரி தெரிவிப்பு

[சென்னை]

இந்திய கடல் எல்லைக்குள் வரும் இலங்கை அகதிகளுக்கே மனிதாபிமான அடிப்படையில் இந்தியா உதவும் என்றும் எல்லைக்கு அப்பால் இறக்கி விடப்படும் அகதிகளுக்கு தம்மால் எதுவித உதவியும் வழங்க முடியாது என இராமேஸ்வரத்தில் செயற்படும் இந்திய கடற்படைத் துணை அதிகாரி பிரான்சில் தெரிவித்துள்ளார்.

நேற்று இராமேஸ்வரத்தில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் இறக்கி விடப்படும் அகதிகள்விடயத்தில்இலங்கை கடற்படையே கையாள வேண்டுமென்றும் அவர்தெரிவித்தார்,

கடந்தசெவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து அகதிகள் எவரும் சென்றமைக்கான தகவல் எதுவும் இதுவரையில் இல்லை.

இதேவேளையில் தற்போது யாழ்ப்பாணத்தில் தொடரும் யுத்த நிலைமையை அடுத்து பெருமளவு தமிழ் அகதிகள் தமிழகம் விரைவதும் இவர்கள் இடைநடுவில் கடலில் இறக்கப்பட்டு தத்தளிக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெறுவதும் ஏற்கனவே தெரிந்ததே. (க)

## இலங்கை அரசாங்கத்தின் படை உபகரண கொள்வனவு குறித்து இஸ்ரேல் உன்னிப்பாக அவதானிப்பு

### நாளேடு தகவல்

(பெல்அவிவ்)

இலங்கை அரசு கூடுதலாக அளவு ஆயுதங்களை அவசர அவசரமாக கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுவது குறித்து இஸ்ரேல் அரசு உன்னிப்பதாக அவதானித்து வருவதாக இஸ்ரேலிய பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப் பத்திரிகை மேலும் தெரிவிக்கையில் ; தற்போதைய பேர் நிலை உச்சக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில் இஸ்ரேலிடம் கூடுதலான ஜெற் விமானங்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் ஒன்றில் இலங்கை அரசு கைச்சாத்திட்டுள்ளதாம். (க)

## தனங்களப்பு மோதல் சம்பவத்தில் 2 படை அதிகாரிகள்; 7சிப்பாய்கள் பலி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் தனங்களப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது இரண்டு அதிகாரிகளும் ஏழு இராணுவத்தினரும் பலியானதாக அரசுச்செய்திகள் தெரிவித்தன.

.. படைந்த இராணுவத்தினர் பலாலி இராணுவ வைத்தியசாலையிலும் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுதிமக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகளுக்கும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவும் விசேட தகவல் தொடர்பு நிலையம் தெரிவித்துள்ளது. (க)

## விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையுத்தரவு மேலும் நீடிப்பு

### இந்திய மத்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை இந்திய மத்திய அரசு நேற்று முன் தினம் இரவு முதல் நீடித்துள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம் மீது இந்திய மத்திய அரசினால் விதிக்கப்பட்ட தடையுத்தரவு இன்னமும் ஒரிரு தினங்களில் காலாவதியாக உள்ள இந்நிலையிலேயே இந்த நீடிப்பு உத்தரவை இந்திய மத்திய அரசு விடுத்துள்ளது.

தேசிய நாளை முன்னிட்டு மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இந்திய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதையடுத்து மேற்படி தடை யுத்தரவு அமுலிற்கு கொண்டுவரப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே (க-வ)

## யாழ். யுத்தநிலைவரம் தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் நாளை கூட்டம்

[கொழும்பு]

யாழ். குடாநாட்டின் யுத்த நிலைமை தொடர்பாகவும் வடக்கு-கிழக்கின் தற்போதைய நிலைப்பாடு குறித்தும் விரைவில் முக்கிய கூட்டம் ஒன்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாளைதிங்கட்கிழமைஅலரி மாளிகையில் இடம்பெறவுள்ள முக்கிய கூட்டத்தில் யாழ். குடா நாட்டின் யுத்த நிலைமையில் அரசின் அணுகுமுறைகள் குறித்து விரிவாக விளக்கப்படும் என ஜனாதிபதி செயலகம் விடுத்த நேற்றைய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சிஉட்பட முக்கியமான சகல கட்சிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமெனவும்ஒவ்வொரு கட்சியிலிருந்தும் தலா இரு பிரதிநிதிகள் கலந்து கொள்வர் என்றும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (க-வ)

## களுத்துறையில் ஐந்து கடைகள் மின்ஒழுக்கினால் எரிந்து நாசம்

(கொழும்பு)

களுத்துறை தெற்கு வீதியில் உள்ள லெபட்சட் வீதியில் ஏற்பட்ட தீவிபத்தினால் ஐந்து கடைகள் முற்றாக எரிந்து சாம்பலாகின.

நேற்று முன்தினம் இரவு 7.55 மணிக்கு இச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தீவிபத்தினை கொழும்பில் இருந்து வந்த தீயணைக்கும் படையினர் தீயை அணைத்து இரவு 9.30 மணிக்குக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததென்று களுத்துறை தெற்கு குற்றத் தடுப்பு பொலிஸ் நிலைய அதிகாரி பிரதம இன்ஸ்பெக்டர் ஜெலதிலக்கா தெரிவித்தார்.

இத் தீவிபத்தினால் சுமார் 20 லட்சம் ரூபாவிற்கு மேல் நட்டமேற்பட்டிருப்பதாக ஆரம்பமதிப்பீட்டின் கையில் இருந்து தெரிய வந்துள்ளதுடன்தீவிபத்துமின்னொழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## இலங்கையின் நிலைவரம் தொடர்பாக புதுடில்லியில் நேற்றும் ஆராய்வு

(புதுடில்லி)

இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து இந்திய அமைச்சர்கள் மட்டத்தில் நேற்று விரிவாக ஆராயப்பட்டது.

எனினும் நேற்றைய கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்த ஒருவித தகவலும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

ஆனையிறவுப் படைத்தளம் மீதான தாக்குதலை படுத்து இலங்கையில் ஏற்பட்டுவரும் மாறுதல்களை இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருவதும் இது விடயம்குறித்து அறிக்கைகள் வெளியிட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## இருஇளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் கிழக்கு தெல்லிப்பழையைச் சேர்ந்த நவரத்தினம் ஜீவதாஸ் (வயது. 21) கொக்குவில் கிழக்கைச்சேர்ந்த அரியகுட்டி தியாகராசா ஆகிய இருவரும் தற்போது காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் கடந்த 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டு 11 ஆம் திகதி காங்கேசன் தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதாக யாழ். பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இக் கைது குறித்து யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-வ]

★ அமைச்சர்கள், பா. உறுப்பினர்களின்

# சம்பள அதிகரிப்புகள் யாவும் உடனடியாக இடை நிறுத்தம்

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்புகள் யாவும் உடனடியாக இடை நிறுத்திவைக்கப்பட்டதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற புகையிரத தொழிற் சங்கப்பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டின்தற்போதையயுத்தச் சூழ் நிலையில் சம்பள அதிகரிப்பு குறித்துப் பேசுவது நியாயமாகாது.

நாட்டின் எந்தச் சூழ் நிலையிலும் கூட அரச ஊழியர்களின் சம்பளம் அதே நிலையில் இருக்கும் என்றும் எக்காரணம் கொண்டும் குறைக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஊழியர்கள் சம்பள அதிகரிப்பிற்கு குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும் நாட்டு நிலைமையில் பேதங்களை மறந்து சகலரும் ஒன்றுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (க)

# வடக்குக் - கிழக்கு யுத்தநிலைமையை
# இந்தியா உன்னிப்பாக கவனிக்கிறது

## இந்திய இராணுவத்தளபதி தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையின் வடக்கு — கிழக்கில் தற்போது இடம் பெற்று வரும் நிலைமை களை இந்தியா மிக உன்னிப் பாக அவதானித்து வருவ தாக இந்திய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பிர காஷ்மலிப்தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவக் கல் லூரியில் நேற்று உரையாற் றிய போதே மேற்கண்ட வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் இந்திய இராணுவம் இலங்கைத் தீவை தொடர்ந்து நோட்டமிட்டு வருவதாகவும் — இலங்கையின் வடக்கு - கிழக்கில் சமாதானம் ஏற் படுவதையே இந்தியா விரும் புகிறது என்றும் தெரிவித் தார்.

இலங்கையின் வடக்கு — கிழக்கில் குறிப்பாக யாழ். குடா நாட்டில் மோதல் உச்ச கட்டத்தை அடைந்துள்ளஇந் நிலைமையில் இந்திய நாட் டின் இராணுவத் தளபதியின் மேற்படி உரை முக்கியத்து வம் வாய்ந்த ஒன்று என இராணுவ விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-வ)

# திருடர் தொல்லை தலைவிரித்தாடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஏற் பட்டுள்ள இடம் பெயர்வை அடுத்து திருடர்களின் தொல் லை அதிகரித்துள்ளது.

இடம் பெயர்ந்தவர்களின் வீடுகளுக்குள் புகுந்து இத் திருடர்கள்அங்குள்ளபொருட் களை சூறையாடிச் செல்கின் றனர்.

இடம் பெயர்ந்து இக்கட் டான சூழ்நிலையில் மக்கள் சொல்லொணாத்துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக் கும் இவ் வேளையில் கட்டுப் படுத்த யாருமற்ற நிலையில் திருடர்களின் கொடூரத்தனம் தலைவிரித்தாடுவது மக்கள் மத்தியில் பெரும் பீதியையும் வேதனையையும் ஏற்படுத்தி யுள்ளது. (ந)

## பளையில் நேற்றும் விமானத் தாக்கு

(யாழ்ப்பாணம்]

பளைப்பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் விமா னத் தாக்குதல் இடம்பெற் றுள்ளது.

இத்தாக்குதலால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்த தக வல் எதுவும் நேற்று இரவு வரை கிடைக்கவில்லை. [க]

## பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட குடும்பஸ்தர்

### இளவாலையில் சம்பவம்

இளவாலையைச் சேர்ந்த அருளப்பு லீனப்பு என்பவர் பொய் முறைப்பாடுகாரண மாக அப் பகுதி பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலி சாரால் கடுமையாகத் தாக் கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் பொலிசா ரால் தாக்கப்பட்டது மட்டு மன்றி ஒரு தொகைப் பணம் சம்பந்தப்பட்டோருக்கு செலுத்துமாறும் பணிக்கப் பட்டுள்ளார்.

இது விடயம் குறித்து யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறையிடப்பட்ட தைத் தொடர்ந்து அதிகாரி ஜீவேஸ்வரா இளவாலைப் பொலிஸ் நிலையம் சென்று இது குறித்து விசாரித்ததாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் ஆறு பிள்ளைகளின் தந்தை என்றும் கூறப்படுகின் றது. (க)

## இந்தோனேசியாவில் மூன்றுமாத
# யுத்தநிறுத்தம் ஜூன்மாதம் முதல் அமுல் படுத்தப்படும்

### அரசு அறிவிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில்25வரு டங்களாக சுதந்திரம்கோரிப் போராடிவரும் கிளர்ச்சிக்குழு ஒன்றிற்கும் அந்நாட்டு அர சாங்கத்திற்கும் இடையில் மூன்றுமாத காலயுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத் தானது.

ஜெனிவாவில் இவ்ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை யடுத்து அடுத்தமாதம் 2ஆம் திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்கு இவ் ஒப்பந்தம் அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இலங்கை பற்றி அறிவதில் அதிபர் கிளின்டன் ஆர்வம்

இலங்கையில் தொடரும் யுத்த நிலைமை தொடர்பாக இலங்கை மக்கள் மத்தியில் எழுந்துள்ள பொருளாதார சீர் குலைவு உயிர் உடமை இழப்புகள் குறித்து அமெ ரிக்க அதிபர் பில் கிளின்டன் கூடுதல் ஆர்வம் செலுத்தி வருவதாக வாஷிங்டன் செய் திகள் தெரிவித்துள்ளன.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயுடன் தொடர்பு கொண்டு இலங்கை நிலைவரம் குறித்து உடனுக் குடன் அதிபர் கிளின்டன் அறிந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணத் தின் தற்போதைய கள நிலை பற்றி அறிவதில் அதிபர் ஆர்வம் கொண்டுள் ளார். [க]

## இலங்கை பூராவும்
# 13 இலட்சத்து 41 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டது

### கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பூராவும் 13 லட் சத்து 41 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதாக கூட்டுறவு அபி விருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

74 கூட்டுறவுச் சங்கங்கள் 489 முகவர் நிலையங்கள் ஊடாக மேற்படி நெல் கொள்வனவு செய்யும் நட வடிக்கையில் ஈடுபட்டுள்ளதா கவும் இதற்கென 14 கோடி செலவிடப்பட்டுள்ள தாகவும் திணைக்கள உயர் அதிகாரி கே. எஸ். பெரேரா தெரி வித்துள்ளார்.

வடக்கு — கிழக்கில் மட் டும் 27 நிலையங்கள் செயற் படுவதாகவும், கொள்வனவு செய்யப்பட்ட நெல் கிலோ 14 ரூபாப்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப் படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### இந்திய..-

தற்போதைய யாழ்ப்பா ணம் நிலைவரம் தொடர் பாகவும் இலங்கை அரசாங் கத்தின் யுத்த அணுகுமுறை கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரி விக்கப்படுகிறது.

இந்திய விமானப்படைத் தளபதி ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்கா குமாரதுங்க, பிரதிப் பாதுகாப்பு அமைச் சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த உட்பட முக்கிய தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது தெரிந் ததே. (க-வ)

### இந்- கடற்-..

கப்பல்கள் பங்கு கொண்ட தாகவும் அவற்றுள் ஒன்று இந்திய நாசகாரிக் கப்பல் என்றும் மற்றையது போர்க் கப்பல் என்றும் ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்றும் இவ் ஒத்திகையில் ஈடுபட்டது என்றும் தெரிவிக்கப்படு கிறது.

இவ் ஒத்திகை குறித்து இந்திய மத்திய அரசு கருத்துத் தெரிவிக்கையில் இது இந்தி யாவின் ஒரு வழமையான நடவடிக்கை என்றும் இதில் எந்தவித உள்நோக்கமும் கிடையாது என்றும் தெரிவித் துள்ளது.

என்றும் இந்தியாவின் இக் கூட்டுஒத்திகை சந்தேகத்திற் கிடமானது என அவதானிகள் தெரிவித்துள்ளனர். (க வ)

### யந்திரங்களை...

மென மன்னார் மாவட்ட கட்டளை இடும் அதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மன்னார் மாவட்ட கட் டளை அதிகாரியின் இந்த உத்தரவை மீறுபவர்களை நீதி மன்றங்களில் நிறுத்தி விசாரணை செய்யப்படாமல் அவர்களிடம் இருந் உடனடி யாகவே தண்டம் அறவிடப் படும் என்று அவர் தெரிவித் துள்ளார். (வ)

### மண்ணெண்ணை...

இருப்பதினால்] அவர் காங் கேசன் துறை செல்ல முடி யாது இருப்பதாக செய்திகள் தெரிவிக்கும் அதே வேளை மண்ணெண்ணையை இறக்கு வதற்கு எண்ணைத் தாங்கி களில் இடம் இல்லை என் றும் மற்றொரு செய்தி தெரி விக்கிறது.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் ஊரடங்குச் சட்டம் தொடர்வதினால் வடபிராந்திய பெற்றோலி யக் கூட்டுத்தாபனம் பவுசர் கள் மூலம் எண்ணையை எரிபொருள் நிலையங்களுக்கு அனுப்பமுடியாதுள்ளது என் றும் செய்திகள் தெரிவிக் கின்றன.

காங்கேசன் துறை துறை முகத்தில் தரித்து நிற்கும் மண்ணெண்ணைக் கப்பலில் இருந்து உடனடியாக எண்ணை இறக்கப்படாது விட்டால் கப்பல் தாமதத் மாகும்ஒவ்வொருநாளிற்கும்ா பெருந் தொகையானவாடை கக்கட்டணம்செலுத்தவேண் டிவரும்என்றும் தெரிவிக்கப்ப டுகிறது. (வ)

## டக்ளஸிற்கு அவசர கோரிக்கை

கொழும்பு, பேராதனைப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்று தற்போது யாழ்ப் பாணத்துள் அகப்பட்டிருக் கும் மாணவர்கள் தாம் மீண் டும் பல்கலைக்கழகங்களுக்கு செல்வதற்கு கப்பல் சேவை யில் முன்னுரிமை வழங்கு மாறும் ஈ.பி டி. பி. செயலா ளர் நாயகம் டக்ளஸ்தேவா னந்தாவைக் கடிதம் மூலம் கேட்டுள்ளனர்.

இதே வேளையில் வெளி நாடுகளில் இருந்து யாழ்ப் பாணம் வந்தோரும் மீண்டும் வெளிநாடு செல்ல முடியாமல் பெரும் அவல நிலைக்கு உள் ளாகியிருப்பதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (க)

### அரசு..-

பட்டுள்ள இலங்கை இராணு வமும், தமிழீழவிடுதலைப் புலிகளும், அப்பாவித் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க் கைக்கு குந்தகம் ஏற்படாத வாறு தமது யுத்த நடவடிக் கைகளை நெறிப்படுத்துவ தில் தீவிர அக்கறை செலுத்த வேண்டும்.

தொடரும் யுத்தத்தினால் இருசாராரும் பாரிய உயிரி ழப்புக்களை சந்திக்க வேண் டியவர்களாக உள்ளார்கள்.

எனவே யுத்தத்தில் ஈடுபட் டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பினரும் ஸ்ரீலங்கா அரசும் அனைத்துலக மனிதா பிமான சட்டங்களுக்குஅமை வாக நடந்துகொள்வது அவ சியமாகும் என சர்வதேச மன்னிப்புச்சபை கேட்டுக் கொண்டுள்ளது. [வ]

## ★ ஊரடங்கு உத்தரவையடுத்து
# மண்ணெண்ணை விநியோகிக்கமுடியாது பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திணறல்

(யாழ்ப்பாணம்)

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருப்பதனால் மண்ணெண் ணையை பவுசர்கள் மூலம் தனது எரிபொருள் விற்பனை முகவர்களுக்கு விநியோகம் செய்ய முடியாது வடபிராந் திய பெற்றோலியக் கூட்டுத் தாபனம் திணறுவதாக செய் திகள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலைகாரணமாக மண்ணெண்ணைக்கு தட்டுப் பாடு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய கூட்டுறவுச் சங் கங்கள்மூலம் 2லீற்றர் மண் ணெண்ணை வழங்கப்பட்டு வருகிறது.

மண்ணெண்ணை விநியோகத் தில் தடங்கல் ஏற்பட்டிருப்ப தினால் வெளியில் 1லீற்றர் மண்ணெணைய் 50ரூபாவாக விற்கப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை கல்வியங்காடு திருநெல்வேலி ஆகிய இடங் களில் எரிபொருள விற்பனை நிலையங்களில் பெற்றோல் தாராளமாக விநியோகம் செய்யப்பட்டது.

## நேற்றும் ஷெல் சத்தங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பகுதியில் நேற்றுப் பகல் மோதல் சம்பவங்கள் எதுவும் இடம்பெறாத போதும் நள்ளிரவு வேளையில் ஷெல் சத்தங்கள் மற்றும் சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

எனினும் சேதவிபரங்கள் குறித்த தகவல் எதுவும் நேற்று நள்ளிரவு வரை கிடைக்கவில்லை.

## மூன்று கோவிலடியில் மோதல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் உரும்பி ராய்ப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்ற தாகத் தெரிவிக்கப்படுகிறது உரும்பிராய், கோண்டாவில் மூன்று கோவிலடியில் நேற்று நடைபெற்ற இம்மோதல் சம்பவத்தின்போது ஒருவர் கொல்லப்பட்டதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்தை அடுத்து இப் பகுதியை இராணுவத்தினர் தீவிர ரோந்து நடவடிக்கை யில் ஈடுபட்டதாகவும் செய் திகள் தெரிவிக்கின்றன. (வ)

## அரச அதிபர் கோரிக்கை

[வவுனியா]

மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரியில் கல்வி கற்கும் யாழ்ப்பாண மாணவர்களை யாழ். கல்வியியல் கல்லூரியில் கல்வி கற்க ஏற்பாடுகளை உடன் மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன் ஈ. பி. டி. பி செயலாளர் டக்ளஸ் தேவா னந்தாவைக் கேட்டுளளார்.

இது தொடர்பான அவசர வேண்டுகோளை அவர் விடுத் துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

தற்போதய நிலைமையில் யாழ்ப்பாண மாணவர்கள் வவுனியா மற்றும் மட்டக் களப்பு கல்வி நிலையங்களில் கல்வி கற்பது தேவையற்ற பணவிரயத்தையும் வீண் காலதமாத்தையும் ஏற்படுத் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரி னால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 14-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.